முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 843

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.01.2022, புதன்கிழமை

1. மாதர்மபலம் கொண்ட அரங்கனே
   மாதவசியாய் வாழும் தேசிகனே
   ஆறுமுகன் என் அவதாரமே
   அரங்கஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானும் ஞான அறிவுரை ஆசி தன்னை
   உரைத்திடுவேன் பிலவ கலை திங்கள் தன்னில்
   (பிலவ வருடம் தை மாதம் 6ம் நாள், 19.01.2022 புதன்கிழமை)
   ஞானவான்கள் சக்திகொண்ட சபையாக ஞாலமதில் ஓங்காரக்குடில் படைத்து
   படைத்துமே கலியுகமக்களையும் பழுதின்றி ஞானிகளாக்க சேவையாற்றுகின்ற
3. ஆற்றுகின்ற அரங்கனே உன் சன்மார்க்கமும்
   ஆற்றல்மிக்க அரங்கனே உன் தர்மமும்
   மாற்றம் செய்து கலியுக மக்களை
   மண்ணுலகில் ஞானிகளாக்கி வழிநடத்தக்கூடும்
4. கூடவே இந்த அற்புதமான சேவைக்கு
   குறையின்றி ஆறுமுகப்பெருமான் யான்
   ஈடேற்றம் செய்து பெருந் துணையாய் இருக்க
   இனிதே அரங்கன்உன்வழி கலியுகமக்கள் என்னைகண்டு கடைத்தேற்றம் பெறுவரப்பா
5. அப்பனே தேற்றம் தரும் மகாசக்தியாக
   அகிலத்தை மாற்றும் யோக சக்தியாக
   சுப்பன் என் மகாசூட்சுமமாய் நீ இருக்க
   சுத்தநெறி கடைபிடிக்கும் மக்களெல்லாம்
6. மக்களெல்லாம் மண்ணுலகில் மாதவசியாகி
   மகான் உன் எண்ணம் வழி உலகமாற்றத்தில்
   உலகமாற்றத்தில் அனைவரும் பங்குகொண்டு உண்மை ஞானிகளாக மாற்றம் பெறுவரென்பேன்
   ஆற்றல்பட இந்த சூட்சுமம் அடைய அகிலத்தார் அரங்கன் உன்னை தொடர்ந்து வருதல் வேணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–